
தமிழ் எங்கள்
உயிருக்கு நேர்
TNPSC
TNPSC
GROUP 2 AND GROUP 4
SPECIAL
By ANANDHAVELAN G.

# பழைமை(குறள்)

www.weshineacademy.com
8939 144 344 | 8939 244 344

பழைமை எனப்படுவது யாதெனின் யாதும்
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு.

1. “பழைமை” எனப்படுவது குறித்து வள்ளுவர் வலியுறுத்துவது எது?

A) நீண்டகாலம் பழகுதல் மட்டும்

B) பொருள் உதவி செய்தல்

C) உரிமை குறையாமல் நட்பை நிலைநிறுத்துதல்

D) அடிக்கடி சந்தித்துப் பேசுதல்

2. “யாதும் கிழமையைக் கீழ்ந்திடா நட்பு” என்ற அடியின் மூலம் அறியப்படுவது எது?

A) நண்பர்களிடையே வேறுபாடு காணக்கூடாது

B) பழைய நண்பர்களின் உரிமையை குறைக்காமல் பாதுகாக்க வேண்டும்

C) நண்பர்களை சோதித்துப் பழக வேண்டும்

D) நட்பு என்பது தேவைக்கேற்ப அமைய வேண்டும்

3. கீழ்க்கண்டவற்றுள் இக்குறளின் மையக்கருத்துக்கு மிகவும் பொருத்தமானது எது?

A) பழைய உறவை விட புதிய உறவு சிறந்தது

B) நட்பு என்பது பயன் சார்ந்த உறவாகும்

C) காலப்போக்கிலும் குறையாத உரிமை கொண்ட உறவே உண்மைப் பழைமை

D) நீண்ட நாள் அறிமுகம் இருந்தால் அதுவே சிறந்த நட்பு

நட்பிற் குறுப்புக் கெழுதகைமை மற்றதற்கு
உப்பாதல் சான்றோர் கடன்.

1. “நட்பிற் குறுப்பு” என்று வள்ளுவர் குறிப்பிடுவது எதை?

A) நண்பர்களின் குறைகளை

B) நட்பின் வெளிப்புற அடையாளங்களை

C) நண்பர்களுக்கிடையேயான உரிமை உணர்வை

D) பழைய பகையை

We Shine Academy SINCE 2013 Guiding you to get through TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM

2. “மற்றதற்குப் உப்பாதல் சான்றோர் கடன்” என்ற தொடரால் வள்ளுவர் உணர்த்துவது எது?

A) நண்பர்களின் தவறுகளை வெளிப்படுத்துதல்

B) நண்பர்களின் உரிமையை மதித்து ஏற்றுக்கொள்வது சான்றோரின் பண்பு

C) நட்பில் ஒழுக்கம் தேவையில்லை

D) செல்வந்தர்களுடன் மட்டுமே பழக வேண்டும்

3. இக்குறளின் கருத்திற்கு ஏற்ப சான்றோரின் இயல்பாக அமைவது எது?

A) நண்பரின் உரிமை மீறலை வெறுத்தல்

B) பழைய நட்பின் உரிமைச் செயல்களை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளுதல்

C) தேவைக்கேற்ப நட்பை மாற்றிக்கொள்ளுதல்

D) நண்பர்களிடையே எல்லை வகுத்துப் பழகுதல்

பழகிய நட்பெவன் செய்யுங் கெழுதகைமை
செய்தாங்கு அமையாக் கடை.

1. “பழகிய நட்பு எவன் செய்யும்?” என்று வள்ளுவர் வினாவுவதன் நோக்கம் எது?

A) பழைய நட்பின் பயனை மறுப்பது

B) நட்பின் நிலைத்தன்மையை சந்தேகிப்பது

C) உரிமையோடு செய்யப்பட்ட செயல்களை ஏற்காத நட்பின் பயனின்மையை உணர்த்துவது

D) நண்பர்களை விலக்கிக் கொள்ள அறிவுறுத்துவது

2. இக்குறளில் “கெழுதகைமை” என்பது எதை குறிக்கிறது?

A) நண்பரின் செல்வாக்கை

B) பழைய நண்பர்களின் உரிமைமிகு பழக்கத்தை

C) நட்பின் வெளிப்புற மரியாதையை

D) நண்பர்களின் உதவி மனப்பான்மையை

3. கீழ்கண்டவற்றுள் இக்குறளின் கருத்திற்கு பொருந்துவது எது?

A) நண்பரின் செயல்களை எப்போதும் விமர்சிக்க வேண்டும்

B) உரிமையுடன் நடந்துகொள்ளும் நண்பரை ஏற்றுக்கொள்வதே உண்மையான பழைமை நட்பு

C) பழைய நண்பர்களிடம் எல்லை கடைபிடிக்க வேண்டும்

D) நட்பில் உரிமை அதிகமானால் பிரிவு ஏற்படும்

விழைதகையான் வேண்டி இருப்பர் கெழுதகையாற்
கேளாது நட்டார் செயின்.

1. “கேளாது நட்டார் செயின்” என வள்ளுவர் குறிப்பிடுவது எதை உணர்த்துகிறது?

A) நண்பர்கள் ஆலோசனை இன்றி செயல்படக்கூடாது

B) நண்பரின் உரிமை காரணமாக அனுமதி இல்லாமலும் செயல் நிகழலாம்

C) நட்பில் ஒழுங்கு தேவையில்லை

D) நண்பர்களின் செயலைத் தண்டிக்க வேண்டும்

2. இக்குறளின் படி, நல்ல நண்பரின் பண்பு எது?

A) நண்பரின் தவறுகளை உடனே கண்டித்தல்

B) நண்பரின் செயலை சந்தேகத்துடன் அணுகுதல்

C) உரிமையால் செய்யப்பட்ட செயலை விருப்பத்துடன் ஏற்றுக்கொள்ளுதல்

D) நண்பரிடமிருந்து விலகி நிற்றல்

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

3. “விழைதகையான் வேண்டி இருப்பர்” என்ற தொடரால் அறியப்படுவது எது?

A) நண்பர்களிடம் எப்போதும் அனுமதி பெற வேண்டும்

B) பழைமை நட்பில் உரிமை மற்றும் ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மை முக்கியம்

C) நண்பர்களின் செயலை மறுக்க வேண்டும்

D) உரிமை கொண்ட நட்பு நிலைக்காது

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுணர்க
நோதக்க நட்டார் செயின்.

1. “நோதக்க நட்டார் செயின்” எனும் நிலையில் சான்றோர் எவ்வாறு கருத வேண்டும் என்று வள்ளுவர் கூறுகிறார்?

A) நட்பை உடனே முறித்துக்கொள்ள வேண்டும்

B) நண்பரை பகைவனாக எண்ண வேண்டும்

C) அது அறியாமையாலோ உரிமையாலோ நிகழ்ந்தது எனக் கருத வேண்டும்

D) நண்பரைப் பழிவாங்க வேண்டும்

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

2. இக்குறளில் “பெருங்கிழமை” என்பது எதை குறிக்கிறது?

A) பெரிய குற்றத்தை

B) அதிகமான செல்வத்தை

C) மிகுந்த உரிமை உணர்வை

D) நீண்ட நாள் பழக்கத்தை மட்டும்

We Shine Academy® Guiding you to get through TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM

3. கீழ்க்கண்டவற்றுள் இக்குறளின் மையக்கருத்து எது?

A) நண்பரின் தவறுகளை பெரிதுபடுத்தக் கூடாது

B) நண்பரின் வருத்தமளிக்கும் செயலை நட்புரிமை அல்லது அறியாமை காரணமாகப் புரிந்துகொள்ள வேண்டும்

C) தவறு செய்த நண்பரை விலக்க வேண்டும்

D) நட்பில் உரிமை இருக்கக் கூடாது

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

எல்லைக்கண் நின்றார் துறவார் தொலைவிடத்தும்
தொல்லைக்கண் நின்றார் தொடர்பு.

1. “தொல்லைக்கண் நின்றார் தொடர்பு” என வள்ளுவர் குறிப்பிடுவது யாரைக் குறிக்கிறது?

A) புதிய நண்பர்களை

B) துன்பகாலத்தில் துணைநிற்கும் பழைய நண்பர்களை

C) செல்வந்த நண்பர்களை

D) அறிவில்லாத நண்பர்களை

2. “எல்லைக்கண் நின்றார் துறவார்” என்பதன் மூலம் வள்ளுவர் உணர்த்துவது எது?

A) நண்பர்களின் தவறுகளை ஏற்கக்கூடாது

B) துன்பம் வந்தாலும் பழைய நட்பை கைவிடாதிருத்தல் வேண்டும்

C) நட்பில் எல்லை அவசியம்

D) பயனுள்ளவர்களுடன் மட்டும் பழக வேண்டும்

3. இக்குறளின் அடிப்படையில் உண்மையான பழைமை நட்பின் இயல்பு எது?

A) நன்மை இருக்கும் வரை மட்டுமே தொடரும்

B) பொருள் சார்ந்த உறவாக அமையும்

C) கேடு வந்தாலும் பிரியாத உறுதிப்பண்பைக் கொண்டது

D) தூரம் ஏற்பட்டால் முடிவடையும்

அழிவந்த செய்யினும் அன்பறார் அன்பின்
வழிவந்த கேண்மை யவர்.

1. “அழிவந்த செய்யினும் அன்பறார்” என்று வள்ளுவர் கூறுவதன் மூலம் விளங்குவது எது?

A) நண்பர்களின் தவறுகளை ஆதரிக்க வேண்டும்

B) உண்மையான நண்பர்கள் துன்பம் செய்தாலும் அன்பை விலக்கமாட்டார்கள்

C) நட்பில் கோபம் இருக்கக்கூடாது

D) நண்பர்களின் செயல்களைப் பொருட்படுத்த வேண்டாம்

2. “அன்பின் வழிவந்த கேண்மை” என்பது எத்தகைய நட்பைக் குறிக்கிறது?

A) பயன் நோக்கிய நட்பு

B) அதிகார அடிப்படையிலான நட்பு

C) அன்பை அடிப்படையாகக் கொண்ட நிலையான நட்பு

D) தற்காலிக பழக்கம்

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

3. கீழ்க்கண்டவற்றுள் இக்குறளின் கருத்திற்கு மிகவும் பொருத்தமானது எது?

A) நண்பர் தவறு செய்தால் உடனே விலக வேண்டும்

B) அன்பின் அடிப்படையில் ஏற்பட்ட நட்பு இடரிலும் நிலைத்திருக்கும்

C) நட்பில் உரிமை இருக்கக்கூடாது

D) கேடு தரும் நண்பரை பகையாக எண்ண வேண்டும்

கேளிழுக்கம் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு
நாளிழுக்கம் நட்டார் செயின்.

1. “கேளிழுக்கங் கேளாக் கெழுதகைமை” என்பதன் மூலம் வள்ளுவர் சுட்டிக்காட்டுவது எது?

A) நண்பர்களின் குற்றங்களை எல்லோரிடமும் கூறுதல்

B) நண்பரைப் பற்றிய பழிச் சொற்களை ஏற்காத உறுதியான நட்புரிமை

C) நண்பர்களின் தவறுகளை மறைத்தல்

D) குற்றம் செய்த நண்பரைத் தண்டித்தல்

2. “நாளிழுக்கம் நட்டார் செயின்” என்ற தொடரின் பொருள் என்ன?

A) நண்பர்கள் தினமும் சந்திக்க வேண்டும்

B) நட்பு காரணமாக நாட்கள் விரைவாக செல்கின்றன

C) நம்பிக்கைக்குரிய நட்பில் தவறு நிகழ்ந்தால் பழகிய காலமே வீணாகிவிடும்

D) நண்பர்களின் தவறுகளை உடனே மன்னிக்க வேண்டும்

3. இக்குறளின் அடிப்படையில் உண்மையான நட்பின் முக்கிய அடையாளம் எது?

A) நண்பரின் செல்வத்தைப் பாராட்டுதல்

B) நண்பரின் குறைகளை வெளிப்படுத்தாமல் இருத்தல்

C) பிறர் கூறும் பழிச் சொற்களைக் கூட நம்பாத ஆழ்ந்த நம்பிக்கை

D) நண்பரின் தவறுகளைப் பொறுத்து கொள்ளுதல் மட்டும்

கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையும் உலகு.

1. “கெடாஅ வழிவந்த கேண்மை” என வள்ளுவர் குறிப்பிடுவது எதை?

A) புதியதாக உருவான நட்பை
B) பயன் நோக்கிய உறவை
C) காலந்தோறும் குறையாமல் தொடரும் பழைமை நட்பை
D) தற்காலிக பழக்கத்தை

2. “விடாஅர் விழையும் உலகு” என்பதன் மூலம் உணரப்படுவது எது?

A) உலகம் செல்வந்தர்களை மட்டுமே விரும்பும்

B) பழைய நட்பை கைவிடாதவர்களை உலகம் மதித்து போற்றும்

C) நண்பர்களை விட்டு விலகுபவர்களை உலகம் பாராட்டும்

D) புகழ் பெற நட்பு அவசியமில்லை

3. இக்குறளின் மையக்கருத்தாக அமைவது எது?

A) நட்பு என்பது தேவைக்கேற்ப மாறக்கூடியது

B) நிலைத்த பழைமை நட்பை பேணுவோர் சமூக மதிப்பைப் பெறுவர்

C) பழைய நண்பர்களுடன் மட்டுமே பழக வேண்டும்

D) உலகம் அன்பை விட செல்வத்தை விரும்பும்

விழையார் விழையப் படுப பழையார்கண்
பண்பின் தலைப்பிரியா தார்.

1. “பழையார்கண் பண்பின் தலைப்பிரியாதார்” என்று வள்ளுவர் குறிப்பிடுவது யாரை?

A) நண்பர்களின் தவறுகளை வெளிப்படுத்துபவர்களை

B) பழைய நண்பர்களிடமுள்ள அன்பை எக்காரணத்தாலும் நீக்காதவர்களை

C) புதிய நட்பை மட்டுமே விரும்புபவர்களை

D) உரிமை இல்லாமல் பழகுபவர்களை

2. “விழையார் விழையப்படுப” என்பதன் மூலம் உணர்த்தப்படுவது எது?

A) பகைவர்கள் அஞ்சுவார்கள்

B) உலகம் பழைய நட்பை வெறுக்கும்

C) பகைவர்கள்கூட இத்தகைய பண்பை பாராட்டுவர்

D) நண்பர்கள் மட்டுமே மதிப்பர்

3. கீழ்க்கண்டவற்றுள் இக்குறளின் கருத்திற்கு மிகச் சரியானது எது?

A) தவறு செய்த நண்பரை உடனே விலக்க வேண்டும்

B) அன்பில் நிலைத்திருக்கும் பண்பு பகைவராலும் மதிக்கப்படும்

C) நட்பில் உரிமை அதிகரிக்கக் கூடாது

D) பழைய நட்பு காலப்போக்கில் குறைய வேண்டும்

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344


Good Night!
Take Care of Your Health
Study Well for Your Goals
Thank You for Joining
STUDY